Australian Government
Department of Home Affairs

இந்த பக்கத்தில்


- முக்கிய திறன்களும் பிரிவுகளும்
    - முக்கிய பிரிவுகளிலோ முக்கிய திறன்களை கொண்டவர்களுக்கான விசேட பயண சலுகைகளுக்கான தகுதிகள்
    - பயண சலுகைக்கு விண்ணப்பிக்க என்னிடம் வீசா இருப்பது அவசியமா?
    - ஆசிய-பசுபிக் பொருளாதார கூட்டுத்தாபனம் (APEC) வியாபார பயண அட்டை (ABTC) கொண்டு பயணம் செய்தல்
    - சலுகைக்காக இணையம் மூலம் விண்ணப்பித்தல்
    - மேலதிக வினாக்கள்


# முக்கிய திறன்களும் பிரிவுகளும்

அவுஸ்திரேலிய சமூகத்தின் சுகாதார பாதுகாப்பையொட்டி அரசாங்கம் கடினமான எல்லைக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அவுஸ்திரேலியாவுக்குள் வரவும் அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேறவும் மிகவும் வரையறுக்கப்பட்ட விமான சேவைகளே அமுலில் உள்ளன. பயண சலுகை வழங்கப்படும் பட்சத்திலும் கூட உங்களால் பயணம் செய்ய இயலாமல் போகலாம். போக்குவரத்து கட்டுபாடுகள் மாறக்கூடியன. ஆகவே அடிக்கடி பாருங்கள். பார்க்கவும்: தேசிய அமைச்சரவையின் ஊடக அறிக்கை.

அவுஸ்திரேலிய குடிமக்கள் உட்பட அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்கும் அனைவரும் அவர்கள் தரையிறங்கிய பிரதேசத்திலுள்ள ஹோட்டல் போன்ற நிர்ணயிக்கப்பட்ட இடத்தில் 14 நாள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுதல் வேண்டும். பிரயாணிகளுக்கான கொரோனா வைரஸ் (COVID-19) பற்றிய அறிவுரைகளைப் பார்க்கவும். தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டதற்கான செலவினை நீங்கள் ஏற்க நேரிடலாம். தனிமைப்படுத்தல் தேவைகள் பற்றி மேலும் அறிந்துக்கொள்ள உள் நாட்டு அல்லது உள்ளூராட்சி சுகாதார திணைக்களம் ஐத் தொடர்புக்கொள்ளுங்கள்.

## முக்கிய பிரிவுகளிலோ முக்கிய திறன்களை கொண்டவர்களுக்கான விசேட பயண சலுகைகளுக்கான தகுதிகள்

நீங்கள் அவுஸ்திரேலிய குடியுரிமை பெற்றவர் இல்லையெனின் அவுஸ்திரேலிய நாட்டு எல்லைப் பாதுகாப்பு ஆணையாளர் உங்களுக்கு தனிப்பட்ட சலுகையை வழங்கலாம்:

- COVID-19 நிலைமைக்கு உதவும் முகமாக அவுஸ்திரேலிய அரசாங்கத்தினதோ பிராந்தியத்தினதோ எல்லை நிர்வாகிகளினதோ அழைப்பின் பேரில் வரு வோர்.
- வான்வழி நோயாளர் ஊர்தி, மருத்துவம் சார்ந்த வெளியேற்றங்கள் மற்றும் முக்கிய வைத்திய சேவை சார்ந்த வழங்கல்கள் போன்ற அத்தியாவசியமானதும் நிபுணத்துவம் வாய்ந்ததுமான வைத்திய சேவைகள்
- அத்தியாவசிய பொருட்களையும் சேவைகளையும் வழங்கும் பணியை தொடர்ச்சியாக பேண தேவையான முக்கிய திறன்களுடன் (வைத்திய தொழில்நுட்பம், முக்கிய உட்கட்டமைப்பு, தொலைத்தொடர்பு, பொறியியலும் அகழ்வும், பொருட் போக்குவரத்து, முதியோர் பராமரிப்பு, விவசாயம், முதன்மை கைத்தொழில், உணவு உற்பத்தி, மற்றும் கடற் கைத்தொழில் போன்றன)
- அவுஸ்திரேலிய ஊழியர்ளால் பங்களிக்க இயலாத, அவுஸ்திரேலியாவின் பொருளாதார மீளமைவுக்கு முக்கிய பங்கு வகிக்கும் து றைகளுக்கு வினியோக சேவைகள் (பொருளாதார தொழில்நுடபம், பெரியளவிலான உற்பத்தி, திரைப்படம், ஊடகம் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்புகள் மற்றும் விசேட தொழில்நுட்பங்கள்).
- சமய மற்றும் சித்தாந்தங்கள் சார்ந்த முக்கிய திறன்களை வழங்குதல்
- திறன்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு குடிவரவு செய்யப்பட்ட தொழில் பட்டியலின் (PMSOL) அடிப்படையில் தொழில் வழங்குனரால் அனுசரனை வழங்கப்பட்டு அவுஸ்திரேலியாவில் அனுமதிக்கப்பட்ட தொழில் வகைகள்
- அவுஸ்திரேலிய அரசாங்கத்தினதோ பிராந்தியத்தினதோ எல்லை நிர்வாகிகளினதோ பரிந்துரையின் பேரின் தேசிய தேவையையொட்டி வருகைத்தரும் ஒருவர்.

இந்த வகையிலான பயண சலுகைக்கு ஒருவர் தனிநபராக கோரக்கூடிய அதேவேளை, ஒருவருக்காக ஒரு வியாபார நிறுவனம் வாயிலாகவும் விண்ணப்பிக்கலாம். ஒரே குழாமை பிரதிநிதித்துவப்படுத்தும் அல்லது வியாபாரத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒன்றுக்கு மேற்பட்டோரின் விண்ணப்பங்கள், ஒரு பிரிவுக்குள் அடக்கப்படக்கூடியன.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள படிவம் வாயிலாக சலுகைகளுக்காக விண்ணப்பிக்கலாம். அதன்போது நீங்கள் போதுமான ஆதாரங்களை சமர்ப்பித்தல் அவசியமாகும். போதுமான ஆதாரங்கள் இல்லாத பட்சத்தில் கோரிக்கைகள் எந்தவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

ஆங்கிலம் அல்லாத எல்லா ஆவனங்களும் உத்தியோகபூர்வமாக ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்திருத்தல் வேண்டும்.

**இரண்டு வாரங்களுக்கு குறையாததும் மூன்று மாதங்களுக்கு மேற்படாததுமான ஒவ்வொரு சலுகையும் இருக்க வேண்டியதுடன், பயணம் செய்ய முன்னரே சலுகைக்கு நீங்கள் விண்ணப்பித்தல் வேண்டும். அவசர வியாபார பயணங்களும் இந்த கால எல்லைக்குள்ளேயே கருதப்படும்.**

விண்ணப்பம் கட்டாயமாக கொண்டிருக்க வேண்டியவை:

- **பயணரின் விபரங்கள்:** பெயர், பிறந்த திகதி, வீசா வகை மற்றும் இலக்கம், கடவுச்சீட்டு இலக்கம், அவுஸ்திரேலியாவில் பரிந்துரைத்த வீட்டு முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்
- **வருகைக்கான காரணம்:** ஆணையாளரால் உங்களுக்கு விருப்பம்/சலுகை வழங்கப்பட வேண்டியமைக்கான காரணம்
- **அதை ஆமோதிக்கும் கூற்று:** குறிப்பிட்ட சலுகையை நீங்கள் பெற உங்கள் வசமுள்ள முக்கிய திறன்கள்/ முக்கிய துறைகள்
- **ஏதுவான ஆதாரங்கள்:** அவுஸ்திரேலிய அரசாங்கத்தாலோ பிராந்தியத்தாலோ உள்ளூராட்சியாலோ இத்தருவாயில் உங்களின் வருகை எவ்வளவு முக்கியம் என்பதைக் குறிப்பிடுங்கள் சான்று ஆவனங்கள் அல்லது கடிதங்கள் உங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருத்தல் அவசியமாகும். அதில் உங்களின் உங்களின் உற்பத்தி அல்லது சேவையைப் பற்றியும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்

ஒவ்வொரு தனிநபரும் தனது பிரயாணத்துக்கு முதல் செல்லுபடியாகும் வீசா மற்றும் ஆணையாளரால் வழங்கப்பட்ட சலுகைக் கடிதத்தையும் தன்னகம் வைத்திருத்தல் வேண்டும்.

## பயண சலுகைக்கு விண்ணப்பிக்க என்னிடம் வீசா இருப்பது அவசியமா?

குறிப்பிட்ட நபர் விண்ணப்பிக்கும் சலுகை, அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட சலுகை பிரிவுகளுக்குள் அடங்கும் பட்சத்தில், அவர் வீசாவொன்று வைத்திருத்தல் அவசியமாகாது. உங்களுக்கான சலுகை அங்கீகரிக்கப்படும் பட்சத்தில் உங்கள் பயணத்துக்காக, செல்லுபடியாகும் வீசாவொன்று அவசியமாகும். வீசாவை பெற்றுக்கொள்வதற்காக அவசியமான அனைத்து தகைமைகளும் உங்களிடம் இருத்தல் வேண்டும். நீங்கள் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் பற்றிய விபரங்களை திணைக்களத்தின் உத்தியோபூர்வ வலைத்தளத்தில் காணலாம்.

## ஆசிய-பசுபிக் பொருளாதார கூட்டுத்தாபனம் (APEC) வியாபார பயண அட்டை (ABTC) கொண்டு பயணம் செய்தல்

ABTC ஐ வைத்திருப்பவர்கள் தன்னிச்சையாகவே அவுஸ்திரேலிய பயணக் கட்டுப்பாட்டின் சலு கைகளுக்கு தெரிவாக மாட்டார்கள். வலுவான ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும். நீங்கள் வியாபார ரீதியான முக்கிய பிரிவுகளில் ஒன்றை கொண்டிருப்பவராக சலுகைக்காக விண்ணப்பிக்கும் பட்சத்தில், நீங்கள் போதுமான சான்றுகளை முன்வைக்கலாம்.

ABTC ஐ வைத்திருப்பவர்கள் அவுஸ்திரேலியாவுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். நீங்கள் அவுஸ்திரேலிய நாட்டில் பணிபுரிய வேண்டுமாயின், செல்லுபடியாகும் வீசாவொன்று உங்களிடம் இருத்தல் அவசியமாகும்.

ABTC கொண்டு அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசித்தல் பற்றிய மேலதிக விபரங்கள் அறிய, வெளிநாட்டு விண்ணப்பதாரிகளுக்கான ஆசிய-பசுபிக் பொருளாதார கூட்டுத்தாபனம் (APEC) வியாபார பயண அட்டை (ABTC) ஐப் பார்க்கவும்.

## சலுகைக்காக இணையம் வாயிலாக விண்ணப்பித்தல்

ஒருவருக்கு ஒரு தடவை மட்டும் விண்ணப்பித்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அது உங்கள் மதிப்பீட்டை தாமதப்படுத்தும. உங்களுக்கு சலுகை கிடைக்காத பட்சத்தில், உங்கள் பயணங்களை தொடர எத்தனிக்காதீர்கள். காரணம் அவுஸ்திரேலியாவை அடைய நீங்கள் விமானத்தில் ஏற அனுமதிக்கபட மாட்டீர்கள். சலுகை வழங்கப்படும் பட்சத்தில், குறிப்பிட்ட ஆதாரத்தை விமான நிலையத்திலும் தன்னகம் வைத்திருத்தல் அவசியம்.

இணையம் மூலம் விண்ணப்பித்தல்

## மேலதிக கேள்விகள் இருக்கும் பட்சத்தில்

முக்கியமான திறன்கள் மற்றும் துறைகள் மற்றும் பயண சலுகை செயல்முறை அல்லது ஏற்கனவே உள்ள முக்கியமான திறன்கள் பயண சலுகை விண்ணப்பத்தைப் பற்றி மேலும் கேள்விகள் இருந்தால், தயவுசெய்து ஆன்லைனில் விசாரணைப் படிவம் ஐ பூர்த்தி செய்யுங்கள்.